**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

## கோவாவில் இந்திய எரிசக்தி வாரத்தை பிரதமர் மோடி இன்று தொடங்கி வைக்கிறார்



**பனாஜி:** கோவா மாநிலம் பனாஜியில் இந்திய எரிசக்தி வாரத்தை பிரதமர் நரேந்திர மோடி இன்று காலை தொடங்கி வைக்கிறார். இதையொட்டி கண்காட்சி மற்றும் கருத்தரங்குகள் நடைபெற உள்ளன. வரும் 9-ம் தேதி வரை நடைபெறும் இது, நாட்டின் மிகப்பெரிய எரிசக்தி தொடர்பான நிகழ்வாக இருக்கும். இதில் 17 நாடுகளைச் சேர்ந்த எரிசக்தித் துறை அமைச்சர்கள் பங்கேற்க உள்ளனர். 900-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் ஸ்டால்களை அமைக்க உள்ளன. இந்நிகழ்வை 35 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பார்வையிடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக நடைபெறும் வட்டமேசை கூட்டத்தில், சர்வதேச எண்ணெய் மற்றும் எரிவாயு நிறுவன தலைமைச் செயல் அதிகாரிகள் மற்றும் நிபுணர்களுடன் பிரதமர் மோடி பங்கேற்க உள்ளார். ஸ்டார்ட்-அப் நிறுவனங்களை ஊக்குவித்தல் மற்றும் அவற்றை எரிசக்தி வலையமைப்பில் ஒருங்கிணைத்தல் ஆகியவை இந்த நிகழ்ச்சியின் முக்கிய குறிக்கோளாக இருக்கும்.

கோவா பயணத்தின்போது, அங்கு அமைந்துள்ள தேசிய தொழில்நுட்ப நிறுவனத்தின் நிரந்தர வளாகத்தையும் பிரதமர் மோடி நாட்டுக்கு அர்ப்பணிக்க

உள்ளார். மேலும் ரூ.1,330 கோடி மதிப்பிலான பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்ட உள்ளார். தெற்கு கோவாவில் உள்ள பேடுல் கிராமத்தில் ஓஎன்ஜிசி-யின் சர்வைவல் மையத்தையும் பிரதமர் மோடி திறந்து வைக்க உள்ளார்.

இதுதவிர, வளர்ந்த இந்தியா, வளர்ந்த கோவா 2047 தொடர்பான நிகழ்ச்சியில் பிரதமர் மோடி உரை நிகழ்த்த உள்ளார். ரோஜ்கார் மேளா திட்டத்தின் கீழ் அரசுப் பணிகளுக்கு தேர்வாகி உள்ள 1,930 பேருக்கு பணி நியமன ஆணைகளையும் பிரதமர் மோடி வழங்க உள்ளார். இந்த தகவல் பிரதமர் அலுவலகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது

## ரஞ்சி கோப்பையில் தமிழகம் வெற்றி




**போர்வோரிம்:** ரஞ்சி கோப்பை கிரிக்கெட் தொடரில் ‘சி’ பிரிவில் இடம் பெற்றுள்ள தமிழக அணி, கோவாவுக்கு எதிரான ஆட்டத்தில் 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

கோவாவில் உள்ள போர்வோரிம் பகுதியில் நடைபெற்று வந்த இந்த ஆட்டத்தில் முதல் இன்னிங்ஸில் கோவா 241 ரன்களும், தமிழகம் 273 ரன்களும் எடுத்தன. 32 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2-வது இன்னிங்ஸை விளையாடிய கோவா 65.5 ஓவர்களில் 168 ரன்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. தமிழக அணி தரப்பில் சாய் கிஷோர், அஜித் ராம் ஆகியோர் தலா 4 விக்கெட்களையும் பிரதோஷ் ரஞ்ஜன் பால் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர். 137 ரன்கள் இலக்குடன் பேட் செய்த தமிழக அணி 3-வது நாள் ஆட்டத்தின் முடிவில் 26 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 61 ரன்கள் எடுத்தது. சுரேஷ் லோகேஷ்வர் 34, பிரதோஷ் ரஞ்ஜன் பால் 22 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று கடைசி நாள் ஆட்டத்தை தொடர்ந்து விளையாடிய தமிழக அணி 49.5 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 142 ரன்கள் எடுத்து7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. சுரேஷ் லோகேஷ்வர் 129 பந்துகளில், 6 பவுண்டரிகளுடன் 52 ரன்களும், பிரதோஷ்ரஞ்ஜன் பால் 125 பந்துகளில், 6 பவுண்டரிகளுடன் 65 ரன்களும் சேர்த்து ஆட்டமிழந்தனர். பாபா இந்திரஜித் 7, விஜய் சங்கர் 13ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

தமிழக அணிக்கு இது 3-வது வெற்றியாக அமைந்தது. 5 ஆட்டங்களில் விளையாடிய உள்ள தமிழகம் 3 வெற்றி, ஒரு தோல்வி, ஒரு டிராவுடன் தனது பிரிவில் 21 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது.

## ‘எனக்கு வேண்டாம் போதை; நமக்கும் வேண்டாம் போதை' - 3,397 பேர் விழிப்புணர்வு வாசகம் உருவாக்கி உலக சாதனை




ஆவடி காவல் ஆணையரக ஆயுதப்படை மைதானத்தில் நேற்று பள்ளி மாணவ - மாணவிகள் 3,397 பேர் ‘எனக்கு வேண்டாம் போதை நமக்கும் வேண்டாம் போதை' என்ற விழிப்புணர்வு வாசகத்தை உருவாக்கி உலக சாதனை புரிந்தனர்.

**ஆவடி:** ஆவடி காவல் ஆணையரக ஆயுதப்படை மைதானத்தில் பள்ளி மாணவ - மாணவிகள் 3,397 பேர் ‘எனக்கு வேண்டாம் போதை நமக்கும் வேண்டாம் போதை' என்ற விழிப்புணர்வு வாசகத்தை உருவாக்கி உலக சாதனை புரிந்தனர்.

ஆவடி காவல் ஆணையரகம், ஏசியா புக் ஆஃப் ரெகார்ட்ஸுடன் இணைந்து, பள்ளி மாணவ - மாணவிகளின் பங்கேற்பில் உலக சாதனையை உருவாக்கும், மாபெரும் போதை தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சியை நேற்று ஆவடி காவல் ஆணையரக ஆயுதப்படை மைதானத்தில் நடத்தியது.

தமிழக டிஜிபி சங்கர் ஜிவால் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பள்ளிக்கல்வித் துறை செயலாளர் குமரகுருபரன், திருவள்ளூர் மாவட்ட கூடுதல்

ஆட்சியர் சுகபுத்ரா, ஆவடி காவல் ஆணையர் சங்கர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இதில், ஆவடி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த 126 அரசு மற்றும் தனியார் பள்ளிகளை சேர்ந்த 3,397 மாணவ - மாணவி கள் பங்கேற்று, 'எனக்கு வேண்டாம் போதை, நமக்கும் வேண்டாம் போதை' என்ற விழிப்புணர்வு வாசகத்தை உருவாக்கி, உலக சாதனை புரிந்தனர். இந்த சாதனையை உலக சாதனையாக ஏசியா புக் ஆஃப் ரெகார்ட்ஸ் அங்கீகரித்தது.

தொடர்ந்து, டிஜிபி சங்கர் ஜிவால் முன்னிலையில், பள்ளி மாணவ - மாணவிகள் போதைப் பொருட்கள் ஒழிப்பு உறுதி மொழியை ஏற்றனர்.

இந்நிகழ்வுகளின் போது, செய்தியாளர்களிடம் டிஜிபி சங்கர் ஜிவால் கூறியதாவது: தென்மாநிலங்களை பொறுத்தவரை தமிழகத்தில் போதை பொருட்கள் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

தமிழகத்தில் கடந்த 3 ஆண்டுகளாக அதிக அளவில் போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இதனால், தற்போது, போதைப்பொருட்கள் புழக்கம் முன்பு இருந்ததை விட குறைவாகவே உள்ளது.

அதுமட்டுமல்லாமல், பள்ளி, கல்லூரி மாணவ - மாணவிகள், ஐ.டி. ஊழியர்கள் மத்தியில் போதைப் பொருள் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது" என்றார்